**தலைப்பு 251 – விலை மதிப்பீட்டுத் திணைக்களம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று மற்றும் வருடாந்த வரவு செலவு திட்டத்தின் 3.1.2 அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள வருமான குறியீடுகளுக்கு ஏற்புடையதான வருமானக் கணக்குகள் என்பன மதிப்பீட்டுத் திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

1.3 கணக்காய்வு விடயவெல்லை

---

தலைப்பு 251 – மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவுகள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆந் திகதி திணைக்களத்தின் பிரதான மதிப்பீட்டாளரிடம் வழங்கப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

1.4 கணக்காய்வு அவதானிப்பு

---

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விபரமாக காட்டப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புகளில் போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.11 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதி ஒழங்குவிதி 128 (1) பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை | அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர் |
|---|---|---|---|
| நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| 128 (1)(அ) | அனுமதித்த முயற்சிகளுக்கு நிதி ஏற்பாடு அளிக்கையில் பாராளுமன்றத்துக்கு இருந்த எண்ணங்களுக்கும் அரசாங்க கொள்கைக்கும் மதிப்புக் கொடுத்து அவரின் திணைக்கள வேலைகள் திட்டமிடப்பட்டு உரிய காலத்தில் | 1. கட்டுநிதி மதிப்பீடுகள் தயாரிப்பதன் குறைப்பாடுகள> | 2.8 |
| | | 2. பெறுகை நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைப்பாடுகள் | 2.2 |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றப்படுகின்றன எனவும், அவ்வாண்டுக்கென விதிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அல்லது குறிப்பிட்டுள்ள இலக்கை எய்துவதற்கும் அல்லது இவ்விரண்டிற்கும் முயற்சி செய்யப்படுகின்றதெனவும் | 3. சொத்துக்களில் பெறுமதி மற்றும் தரம் குறைதல்<br>4. எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளாமை | 2.3<br>2.4 |
| 128(1)(ஆ) | தனது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் திறம்படவுள்ளனவெனவும், தேவைப்படும்போது அவை அரசாங்க வருமதிகளையும், வருமதிகளை ஒழுங்காக, முற்றாக உடனடியாகச் சேகரித்தலையும், பெற்ற பணங்களுக்கு கணக்கு வைத்தலையும், அரசாங்கத்தின் சார்பில் செலவுகளை அனுமதித்தலையும் ஆற்றப்படும் சேவைகளையும் வழங்கு பொருட்களையும் மேற்பார்வை செய்து அவற்றை பரிசோதித்தலையும் அவற்றுக்கு அரசாங்க நிதியிலிருந்து உடனடியாகச் சரியாகக் கொடுப்பனவு செய்தலையும் சரிவர உறுதிப்படுத்தலுக்கும் போதியளவு ஏற்பாடு செய்யப்படுகின்றன எனவும் | பாரப்படுத்தல்களும் பொறுப்புகளம் | 2.4 |
| 128 (1)(இ) | அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளையும் பிற குறைநிரப்பு அறிவுறுத்துரைகளையும் தனது திணைக்களம் கடைபிடிக்கின்றதெனவும், தேவையான விடயத்தில் அவை திணைக்கள அறிவுறுத்துரைகளால் குறைநிரப்பப்படுகின்றனவெனவும் | இணங்கியொழுகாமை | 2.9 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு அத்துடன் மற்றும் விடயங்கள் பற்றி போதிய உள்ளகக் கண்காணிப்பு பேணப்படுவதுடன், காலத்துக்குக் காலம் பரிசீலிக்கப்படுகின்றதெனவும் | 1. வருமானக் கணக்குகளில் குறைப்பாடுகள்<br>2. மனிதவள முகாமைத்துவம் | 2.6<br>2.10 |
| 128(1)(உ) | அரசாங்கத்துக்குச் சொந்தமான | சொத்துக்கள் | 2.3 |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது அதன் கட்டுக்காப்பிலுள்ள பணம், பண்டங்கள், சாதனங்கள் பிற சொத்துக்கள் ஆகியவற்றைப் பாதுகாத்துப் பேணுவதற்கு போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றனவெனவும், இவை காலத்துக்குக் காலம் சரிபார்க்கப்படுகின்றவெனவும், இவை தீர்வு செய்யப்படும்போது அத்தகைய தீர்வு செய்தல் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கவுள்ளனவெனவும் | முகாமைத்துவத்தில் குறைப்பாடு | |
| 128(1)( ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது திறைசேரியால் கேட்கப்படும் அத்தகைய தகவல், கூற்றுகள், விவர அறிக்கைகள் ஆகியன சரியாகவும், உடனடியாகவும் கொடுக்கப்படுகின்றனவெனவும். | 1. வரவு செலவு மதிப்பீடுகளை இயல்பாக தயாரிக்கப்படாமை<br>2. வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தாமதமாகி சமர்ப்பித்தல் | 2.5<br>2.1.2 |
| 128(1) (ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனவெனவும், அத்தகைய வேலைக்கென ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் நிலுவைகள் சம்பந்தமாகவும் அவைகளை விரைவில் அறவிடுவதற்கு எடுத்த நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் காலாண்டுக்கொருமுறையாவது அல்லது வேறு வழியில் பணிக்கப்பட்டவாறு தனக்கு அறிவிக்கின்றார்கள் எனவம், | அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கில் நிலுவை கடன் மீதி அறவிடுதல் | 2.7 |
| 128 (1 ங | பிணை கட்டுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர்கள் நடைமுறையிலுள்ள கட்டளைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்குமிணங்க அவ்வாறு செய்கின்றனர் எனவும், | சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து பிணை பெற்றுக்கொள்ளும் குறைப்பாடுகள் | 2.11 |

## 2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்டாமை

எதிர் பார்க்கப்பட்ட விளைவளவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை

(அ) பல்வேறு நிறுவனங்களில் 17 மதிப்பீட்டுப் பணிகளின் பொருட்டு முற்பணமாக பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தம் ரூபா. 163,000 தொகைக்கு 06 மாதங்கள் தொடக்கம் ஓராண்டு காலம் முடிவடைந்திருப்பினும், அந்தப் பணிகளை முடிவுறுத்தி வருமானத்திற்கு எடுத்திருக்கப்படவில்லை. மேலும் வடமேல் மாகாண அலுவலகம் முற்பணமாக பெற்றுக்கொண்ட ரூபா. 158,500 இற்கு ஏற்புடையதாக, தகவல்களை கண்டறிவதற்கு முடியாதுள்ள கடிதக் கோவைகளின் எண்ணிக்கை 22 ஆகும். இந்த மதிப்பீட்டுப் பணிகள் 39 ஐ நிறைவேற்றப்படாமை காரணமாக கட்டணம் அறவிடுவதற்கு முடியாமல் முற்பணத்தை மட்டும் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலைபேறுடனான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்ளுதல்

2015 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் ஐக்கிய நாடுகளின் சம்மேளனத்தில் உறுப்பினர் நாடுகள் வெளிப்படுத்திய இணக்கப்பாடு பிரகாரம் 2030 ஆண்டாகும்போது ஒவ்வொரு உறுப்பினர் நாடுகளாலும் அடைந்துகொள்ள வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் உள்ளடக்கிய நிலைப்பேறுடனான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சி நிரலின்படி ஒவ்வொரு அரசாங்க நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக திணைக்களத்தால் தமது விடயவெல்லைக்குள் வருகின்ற அலுவல்கள் தொடர்பில் எவ்வாறு செயற்படவேண்டுமென என்பது தொடர்பாக அறிந்து, ஏற்புடையவாறு பொருத்தமான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொண்டதாக கணக்காய்வில் அறியப்படவில்லை.

#### 2.1.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

#### 2.1.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 ஆம் ஆண்டு செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் திணைக்களத்தால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வறிக்கை 40 நாட்கள் தாமதமடைந்து 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2 பெறுகை செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(அ) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவல் கடிதக்கோவைகளின் பொருட்டு அலுமாரிகளை தயாரிப்பதற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா. 211,140 இற்கு பெறுகை வழிகாட்டல் கோவையில் 4.3.1 இன்படி செலவு மதிப்பீடு தயாரிக்காது இரண்டு நிறுவனங்களில் விலை கணக்குகள் கோரப்பட்டிருந்தன. இந்த தயாரிப்புகளின் பொருட்டு தொழில்நுட்ப அலுவலர் ஒருவரின் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்படிவில்லையென்பதுடன், பாதுகாப்பு வைப்புகள் பிடிப்பணமாக

வைத்துக்கொள்ளாது மொத்த தொகையும் ஒப்பந்தக்காரரிடம் செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) திணைக்களத்தின் சட்டப் பிரிவு தாபிக்கப்பட்டிருந்ததுடன், பொரளையில் அமைந்துள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட அலுவலக வலாகத்தில் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளின் பொருட்டு உரிமையாளர்களுடன் முறையான உடன்படிக்கையின்றி ரூபா 1,898,366 ஆன தொகை கட்டிடத் திணைக்களத்திடம் செலுத்தப்பட்டிருந்தது. ஆயினும் அதற்காக கட்டிடத் திணைக்களத்திடம் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை.

2.3 சொத்துக்களின் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்திக்கொள்ளப்பட்டன.

(அ). சொத்துக்களை அட்டவணைப்படுத்தல்

2017 ஆம் ஆண்டு 28 ஆந் திகதிய 01/2017 இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம் கொம்ப்ரோலர் ஜெனரால் அலுவலகத்திடம் தகவல்களை சமர்ப்பிக்கும்போது ஒதுக்கீட்டு கணக்கில் காட்டப்பட்டுள்ள பெறுமதிக்கும் பார்க்க, வாகனங்களின் பெறுமதி மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ஒழுங்குமுறையாக ரூபா. 7,768,000 ஆலும் மற்றும் ரூபா.12,083,950 ஆலும் குறைவாகவும், தளவாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் ரூபா. 14,159,568 ஆல் அதிகமாகவும் குறிப்பிடப்பட்டு அனுப்பியிருந்ததுடன், தகவல்களை சமரப்பிக்கும்போது 04 மாதங்கள் தொடக்கம் 07 மாதங்கள் வரையிலான காலம் தாமதமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ). எரிபொருட் செலவழிவை பரிசோதனை செய்யாமை

2016 ஆம் ஆண்டு திசெம்பர் 29 ஆந் திகதிய 30.'.2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் 3:1 பந்திபடி, 25,000 ம் கிலோ மீற்றர் தூரம் ஓட்டத்தில் விடப்பட்ட பின்னர் அல்லது இயந்திரம் தொடர்பான பிரதான பழுதுபார்த்தலின் பின்னர் ஆகிய விடயங்களில் முன்னராக வரும் சந்தர்ப்பத்திற்கு பின்னர் எரிபொருள் பரிசோதனை செய்ய வேண்டுமாயினும், திணைக்களத்திற்குரிய 02 வாகனங்களின் பொருட்டு அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

2.4 பாரப்படுத்தல்களும் பொறுப்புகளும்

வருடாந்த வரவு செலவு எல்லைகளை கடந்து பாரப்படுத்தல்களை மேற்கொள்ளுதல்

2017 ஆம் ஆண்டு ஏப்பிரல் 27 ஆந் திகதிய 255.'.2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு முரணாக 04 செலவு விடயங்களின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த 33.43 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடை 1.64 மில்லியன் ரூபாவால் விஞ்சி மீளாய்விற்கான ஆண்டில் 1.7 மில்லியன் ரூபாவில் பாரப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

2.5 கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தல்

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப் பகுதியில் திணைக்களத்திடம் அளிக்கப்பட்டிருந்த ஒதுக்கீடு, உபயோகம் மற்றும் மீதி தொடர்பான தகவல்களும் மீளாய்விற்கான ஆண்டில் தகவல்களுக்கு ஏற்புடையதான கணக்காய்வு அவதானிப்புகளும் பின்வருமாறாகும்.

| ஆண்டு | செலவு வகை | தேறிய ஒதுக்கீடு<br>---------------<br>ரூபா மில்லியன் | உபயோகம்<br>--------------<br>ரூபா மில்லியன் | மீதி<br>------------<br>ரூபா மில்லியன் | மீதி தேறிய ஒதுக்கீடுகளில் சதவீதமாக<br>----------------------- |
|---|---|---|---|---|---|
| 2013 | மீண்டுவருஞ் | 260.94 | 259.35 | 1.59 | 0.61 |
| | மூலதனம் | 2,038.00 | 2,035.56 | 2.44 | 0.12 |
| | மொத்தம் | 2,298.94 | 2,294.91 | 4.03 | 0.18 |
| 2014 | மீண்டுவருஞ் | 300.85 | 299.95 | 0.91 | 0.3 |
| | மூலதனம் | 740.50 | 735.12 | 5.38 | 0.73 |
| | மொத்தம் | 1,041.35 | 1,035.07 | 6.28 | 0.6 |
| 2015 | மீண்டுவருஞ் | 365.80 | 364.62 | 1.18 | 0.32 |
| | மூலதனம் | 38.20 | 26.81 | 11.39 | 29.81 |
| | மொத்தம் | 404.00 | 391.44 | 12.56 | 3.11 |
| 2016 | மீண்டுவருஞ் | 378.65 | 363.59 | 15.06 | 3.98 |
| | மூலதனம் | 129.60 | 126.30 | 3.29 | 2.54 |
| | மொத்தம் | 508.25 | 489.89 | 18.36 | 3.61 |
| 2017 | மீண்டுவருஞ் | 387.32 | 360.51 | 26.81 | 6.92 |
| | மூலதனம் | 2,528.50 | 1,088.73 | 1,439.77 | 56.94 |
| | மொத்தம் | 2,915.82 | 1,449.24 | 1,466.58 | 50.30 |

ஒதுக்கீட்டு கணக்கு
-----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

மிகை ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்திருத்தல்
-----------------------------------------------------------------------

3 செலவு விடயங்களின் பொருட்டு மொத்தம் 27 மில்லியன் ரூபா மிகை ஒதுக்கீடு ஏற்பாடு செய்தல் காரணமாக குறித்த செலவு விடயங்களுக்கு ஏற்புடையதான ஒதுக்கீடுகளில் மொத்தம் 113 மில்லியன் ரூபா மட்டும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. அதாவது மீதி, ஏற்பாடு செய்திருந்த தேறிய ஒதுக்கீடுகளில் நூற்றுக்கு 20 தொடக்கம் நூற்றுக்கு 50 வரையிலான அளவில் எஞ்சியிருந்தது.

2.6 மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம்
-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டின் பொருட்டு வருமான குறியீட்டு இலக்கம் 01 இற்கு மதிப்பீட்டு வருமானத்திற்காக மொத்தம் 160 மில்லியன் ரூபா வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் மொத்தம் 164 மில்லியன் ரூபா வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் திணைக்களம் மதிப்பிடப்பட்ட வருமானத்திலும் பார்க்க 4 மில்லியன் ரூபா உழைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பித்த குறியீட்டு இலக்கம் 20.03.02.09 இற்கு வருமானக் கணக்குபடி, மொத்தம் 371.002 மில்லியன் ரூபா நிலுவையாக இருந்ததுடன், அந்த நிலுவை வருமானம் ஆண்டு 1 தொடக்கம் 10 ஆண்டுகளுக்கிடையில் காலவெல்லைக்கு ஏற்புயைடதாகும். நிலுவை வருமானம் அறவிடுவதற்காக பல்வேறு முயற்சிகள் எடுத்திருப்பினும், இதுவரை குறித்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் இந்த நிலுவை தொகை

அதாவது 40.425 மில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளதாக பிரதான மதிப்பீட்டாளரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) சம்பந்தப்பட்ட ஆண்டுகளில் கிடைக்கப்பெற்றிருந்த வருமான பெறுமதியும், கட்டணங்களை விடுவிக்கும் நிறுவனங்களின் பொருட்டு தயாரிக்கப்பட்ட இரசீதுகளின் பெறுமதியும், 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக ரூபா. 8,520,055 ஆன தொகை நிலுவை வருமானமாக ஆவணங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. ஆயினும், இந்த நிலுவை வருமானம் பதிவழிப்பதற்கு ஏற்புயைடதாக பொது திறைசேரயின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அலுவலர்களின் பொருட்டு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மீளாய்விற்கான ஆண்டில் யூலை மாதம் வரையும் ஊக்குவிப்பு படியாக ரூபா. 32,454,880 தொகை திறைசேரி அனுமதியின்றி திணைக்களத்து தலைவரால் வழங்கிய ஆலோசனைகளை அடிப்படையாகக்கொண்டு செலுத்தப்பட்டிருந்ததுடன், பல சந்தர்ப்பங்களில் அலுவலர்களின் கோரிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு செலுத்தல் முறையை திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

(உ) நட்டஈட்டு நியாயச் சபையின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் வரை செயலாளர் படி மற்றும் கணக்காளர் படியாக ரூபா. 986,445 செலுத்தப்பட்டிருப்பினும், 2015 ஆம் ஆண்டு முழுவதும் மற்றும் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை எதுவித நட்டஈடு செலுத்தலை மேற்கொள்ளாது சம்பந்தப்பட்ட படியை மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் 04 சந்தர்ப்பங்களில் நட்டஈடு செலுத்தப்பட்டிருப்பினும் ஆண்டு முழுவதும் மாதாந்தம் படி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.7 அரசாங்க அலுவலர்களுக்கு முற்பணக் கணக்கு

கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கிணக்க கூற்று பிரகாரம் அன்றைய திகதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவையாக இருந்த மீதிகளின் மொத்தம், இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களின் கடன் மீதி தவிர்ந்த ரூபா. 870,168 ஆனதுடன், அந்த நிலுவை மீதியை 03 மாதங்கள் தொடக்கம் 26 மாதங்கள் வரையிலான காலவெல்லைகள் இருந்து வந்தபோதிலும், அந்த நிலுவை மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. இதில் ஓய்வுபெற்ற ஒருவரிடமிருந்து ரூபா. 21,300 தொகையும், பதவி வெறித்தாக்கிய சிலரிடமிருந்து சில மீதிகளும் தற்போது அறவிடப்பட்டிருப்பதாக திணைக்களத்து தலைவரால் கணக்காய்விடம் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 2.8 கட்டுநிதி கணக்கு

திணைக்களத்தின்கீழ் இருந்த கட்டுநிதி கணக்கில் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி இருக்கவில்லை. திணைக்களத்தால் பேணியிருந்த கட்டுநிதி கணக்கு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்விற்கான ஆண்டில் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டுநிதி மதிப்பீட்டின் படி மாதாந்தம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதி, மாதாந்தம் கோரப்பட்ட கட்டநிதி மற்றும் கிடைக்கப்பெற்றிருந்த கட்டுநிதி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

| மாதம் | திட்டமிடப்பட்டவாறு கோரப்பட வேண்டிய கட்டுநிதி | கோரப்பட்ட கட்டுநிதி | கிடைக்கப் பெற்ற கட்டுநிதி | திட்டமிடப்பட்ட மற்றும் கோரப்பட்ட கட்டுநிதிகளுக்கிடையில் உள்ள வேறுபாடு | கோரப்பட்ட கட்டுநிதி மற்றும் கிடைக்கப் பெற்றிருந்த கட்டுநிதிகளுக்கிடையில் உள்ள வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| ------------ | ---------------- | ------------------ | ---------------- | --------------------- | ---------- |
| | | | | | ரூபா.மில் |
| சனவரி | 29.90 | 24.52 | 23.60 | (5.38) | (0.92) |
| பெப்ருவரி | 29.90 | 23.82 | 22.30 | (6.08) | (1.52) |
| மார்ச் | 29.15 | 24.50 | 24.00 | (4.65) | (0.50) |
| ஏப்பிரல் | 34.40 | 27.87 | 28.00 | (6.53) | 0.13 |
| மே | 30.40 | 26.61 | 25.50 | (3.79) | (1.11) |
| யூன் | 30.15 | 25.50 | 24.50 | (4.65) | (1.00) |
| யூலை | 1,531.15 | 25.60 | 24.60 | (1,505.55) | (1.00) |
| ஆகஸ்ட் | 30.65 | 25.50 | 523.60 | (5.15) | 498.10 |
| செப்தெம்பர் | 947.22 | 25.50 | 22.50 | (921.72) | (3.00) |
| ஒக்டோபர் | 30.90 | 25.50 | 22.50 | (5.40) | (3.00) |
| நவம்பர் | 30.65 | 22.50 | 271.50 | (8.15) | 249.00 |
| திசெம்பர் | 31.90 | 21.50 | 271.50 | (10.40) | 250.00 |
| மொத்தம் | 2786.37 | 298.92 | 1,284.10 | (2,487.45) | 985.18 |

(அ). மீளாய்விற்கான ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த கட்டுநிதி அளவு 2,786 மில்லியன் ரூபாவாக இருப்பினும், 299 மில்லியன் ரூபா மட்டும் கோரப்பட்டிருந்தது. ஆண்டுக்குள் கிடைக்கப்பெற்றிருந்த கட்டுநிதி 1,284 மில்லியன் ரூபா மட்டுமாகும். அதனடிப்படையில் ஆண்டுக்குள் திட்டமிடப்பட்ட கட்டுநிதியில் நூற்றுக்கு 11 ஐ கோரப்பட்டிருப்பினும், கோரப்பட்டிருந்த கட்டுநிதி அளவுபோன்று நான்கு மடங்கு கட்டநிதி திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்தது.

(ஆ). யூலை மாதத்தில் திட்டமிடப்பட்ட கட்டுநிதியில் நூற்றுக்கு 02 ம் செப்தெம்பர் மாதத்தில் நூற்றுக்கு 03 ம் போன்ற மிகச் சிறிய அளவில் கோரப்பட்டிருந்தது. ஆகையால் செலவு விடய இலக்கம் 2501 நட்டஈட்டு நியாய சபையின் கொடுப்பனவுகளின் பொருட்டு கிடைக்கப்பெற்றிருந்த நூற்றுக்கு 57 ஆன மீதி ஒதுக்கீடுகளின் பொருட்டு கட்டுநிதி பெற்றுக்கொள்ளாமையால், நட்டஈட்டு நியாய சபையின் செலவுகள் இவ்வாண்டில் முழுமையாக செலுத்தி முடிவுறுத்த இயலாதிருந்தது.

2.9 இணங்கியெழுகாமை
--------------------------------

2.9.1 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை
------------------------------------------------------------------------------------------------------------------------------------

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர்- | | பெறுமதி | இணங்கியொழுகாமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதி ஒழுங்குவிதிக் கோவை | | |
| | நிதி ஒழுங்குவிதி 1645 | - | திணைக்களத்து பேருந்து வண்டியில் மாதாந்த ஓட்டக் குறிப்பு சாராம்சங்கள், 2014 ஆம் ஆண்டில் 10 மாதங்கள் 2015 ஆம் ஆண்டில் 02, மாதங்கள், 2016 ஆம் ஆண்டில் 05 மாதங்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டில் 03 மாதங்கள் கணக்காய்விற்கு சமரப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி 434 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | 1,524,002 | அரசாங்கத்தின் நிதி உதவிமீது இயங்கும் எல்லா அரச நிறுவனங்களின் பொருட்டு கட்டணங்கள் அறவிடாது மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொளள்ப்பட வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் 29 சந்தர்ப்பங்களில் அதற்கு முரணாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது |

2.10 மனித வளங்களின் முகாமைத்துவம்

இணைக்கப்பட்ட பதவியணி, உண்மையான பதவியணி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகள்

திணைக்களத்தின் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான மற்றும் மேலதிக பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டுக்கு திணைக்களத்தால் ஆளுக்குரிய செலவு தொகுதி பொருட்டு 292 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் தனி நபர் செலவு ரூபா. 504,089 ஆக காணப்பட்டது.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உண்மையான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 227 | 43 | 184 | - |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 365 | 330 | 35 | - |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 132 | 120 | 12 | - |
| (iv) | ஆரம்ப நிலை மட்டம் | 96 | 84 | 12 | - |
| (v) | அமய.். ஒப்பந்த | - | 02 | - | 02 |
| | | 820 | 579 | 243 | 02 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்புடைய நிறுவனங்களில் அங்கீகரித்துக்கொள்வதற்கு எதிர் பார்க்கப்படும் சேவை பிரமாணக் குறிப்பு 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆந் திகதியிலும் அங்கீகரிகக்ப்பட முடியாமை காரணமாக 243 வெற்றிடங்களுடன், திணைக்களத்தை பேணிச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது. அது திணைக்களத்தின் செயலாற்றுகையின்மீது தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்ற ஐயம் கணக்காய்வின்போது எழுகின்றது.

2.11 அரசாங்க அலுவலர்களின் பிணை வைத்தல்

---

நிதி ஒழுங்குவிதி 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அலுவலர்களால் பிணை வைக்கவில்லையென்பதுடன். அது தொடர்பாக திணைக்களத்து தலைவரின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.